மிகைச் செலவு, இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட் நிறுவனத்தார் 1973 ஜனவரி, பிப்ரவரித் திங்களில் வெளியிட்ட உருக்கு அளவில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பு, மேலும் பலருக்கு ஓய்வூதியம் அனுமதித்தது, இந்திய அரசு வழங்கிய இரசாயன உரங்களுக்குரிய செலவைச் சரிக்கட்டியதனால் ஆண்டு இறுதியில் எதிர்பாராது ஏற்பட்ட ஒரு சில செலவினங்கள் ஆகியவை இவ்வகையில் ஏற்பட்ட முக்கிய செலவினங்களாகும். ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

3. 1972-73 ஆம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

5. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்–1973-74.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

1973–74 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்கள் குறித்த மானியக் கோரிக்கையை இம் மன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. 1977-79 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழு, 1973–74 ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளை சட்டப் பேரவை முன்வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்கு ஆய்வுக்குழு பரிந்துரைசெய்தது. அவ்வண்ணமே 1973-74 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 6·97 கோடி ரூபாயாக இருக்கிறது. முக்கியமாக ''மருத்துவம்'', ''தொழில்கள்'' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது. கூவம் ஆற்றுப் பராமரிப்பு, முக்கியமான சிறப்புப் பழுதுபார்த்தல் பணிகள், மேலும் பலருக்கு ஓய்வூதியம் அனுமதித்தது ஆகியவை

குறித்து மேற்கொண்ட செலவும், முந்தைய ஆண்டுகளில் தவறான கணக்கு வகைப்பாடுகளைத் திருத்தியதில் தொகை ஈடு செய்ததன் காரணமாக ஏற்பட்ட செலவும், 1973-74 ஆம் ஆண்டு மிகைச் செலவு ஏற்பட்ட முக்கிய இனங்களாகும். ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

3. 1973-74 ஆம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

6. வரவு செலவுத் திட்டம் 1979-80 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 24—தொழில் வளர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற மானியங்களின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாடு தொழிற்துறையில் முன்னணியில் இருந்த ஒரு மாநிலமாகத் திகழ்ந்து வந்தது. ஆனால் இன்றைக்கு அந்தப் பெருமையை இழந்துவிட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதை இந்த கொள்கை விளக்கப் புத்தகத்தில் வெளியிட்டிருப்பார்கள் என்று எதிர் பார்த்தேன். அவ்வாறு செய்யவில்லை, சில அரசாணைகளை, மேலும் சில அரசுக் குறிப்புகளை இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்தில் அதிகமாக வெளியிட்டிருக்கிறார்களே தவிர, அடிப்படையாகத் தொழில் முன்னேறுவதற்கான முறையான திட்டங்கள் யாவை? நாம் இன்றைக்கு ஏற்கனவே இருந்த முன்னேற்றப் பாதையில் இருந்து பின்னே சென்று கொண்டிருக்கிறோமே, இதற்கு என்ன காரணங்கள்? அந்தக் காரணங்கள் ஏற்பட வேறு என்ன காரணங்கள் அடிப்படையாக அமைந்தன? அவைகளை அகற்ற இந்த அரசு என்ன திட்டங்களை வைத்திருக்கிறது? என்பவை

[முற்பகல் 11-00]

களையெல்லாம் இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்தில் காணமுடியவில்லை. இது பெருத்த ஏமாற்றத்தைத் தருகிறது. ஒரு உண்மையை நாம் புரிந்து கொள்ளவேண்டும். நம்முடைய நாடு விவசாயிகள் அதிகமாக வாழுகின்ற நாடு. 80 சதவீதம் கிராமப் புறங்களில் விவசாயிகளாக வாழ்கிறார்கள்.